| முதல் இடைப்பருவத் தேர்வு - 2024 | தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

**காலம் : 1-30 மணி** **பத்தாம்வகுப்பு - தமிழ்** **மதிப்பெண் : 50**

## பகுதி - 1

***குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.***
***2) கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். (7x1=7)***

1. மெத்த வணிகலன் என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது யாது?
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா
இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

3. 'பாடுஇமிழ் பனிக்கடல்' பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சியாதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

4. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவமஉருபு ஈ) உரிச்சொல்

5. தொகைநிலைத் தொடர்களின் வகைகள் எத்தனை?
அ) ஐந்து ஆ) ஆறு
இ) எட்டு ஈ) பத்து

***பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.***

*"மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை*
*மயலுறுத்து கின்ற, இனிய வாசனையுடன் வா*
*இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து மிகுந்த*
*ப்ராண-ரஸத்தை எங்களுக்கு கொடு".*

6. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சுரதா ஈ) கம்பர்

7. ப்ராண-ரஸம் என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது?
அ) சீராக ஆ) அழகு
இ) உயிர்வளி ஈ) உடல்உயிர்

## பகுதி - 2

***குறிப்பு:எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.***
***(10வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்) (2x2=4)***

8. வசன கவிதை - குறிப்பு வரைக.
9. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
10. 'அன்னை மொழியே' எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடலை எழுதுக.

***குறிப்பு:எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. (2x2=4)***

11. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
12. மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
13. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - 3

*குறிப்பு:எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.* **(1x3=3)**

14. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.
15. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

*குறிப்பு:எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.* **(1x3=3)**

16. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இது போன்ற இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
17. தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.

*குறிப்பு:எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.* **(1x3=3)**

18. அளபெடையையும் அதன் வகைகளையும் விளக்குக.
19. ***பழமொழிகளை நிறைவு செய்க.***
    1) உப்பில்லாப் ______
    2) ஒரு பானை ______
    3) விருந்தும் ______

## பகுதி - 4

*குறிப்பு:எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.* **(2x5=10)**

20. ***மொழிபெயர்க்க.***

    The golden sun gets up early morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers: Fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

21. ***காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.***



22. உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.

## பகுதி - 5

*குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.* **(2x8=16)**

23. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.
24. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்பு சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.
25. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com